செய்தி வெளியீடு எண்: 379 நாள்: 15.07.2013

# செய்தி வெளியீடு

## தகுதி வாய்ந்த ஆதிதிராவிட இனத்தை சார்ந்த விண்ணப்பதாரர்களின் கனிவான கவனத்திற்கு.....

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்காக செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் 17.07.2013 முதல் 10.08.2013 வரை வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. நிலம் வாங்குதல் – பெண்களுக்கானது | | வ.எண். 1,2 (ம) 3அ விற்கு – வயது வரம்பு 18 முதல் 55 வரை. குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.1.00 இலட்சம் ஆகும். வரிசை எண். 3ஆ விற்கு– வயது வரம்பு 18 முதல் 55 வரை. பெட்ரோல், டீசல் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கு குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 3.00 இலட்சம் ஆகும். |
| 2. நிலம் மேம்படுத்துதல் – இருபாலருக்கும் | | |
| 3. தொழில் முனைவோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் | | |
| அ. தொழில் முனைவோர் திட்டங்கள் | | |
| ஆ. பெட்ரோல், டீசல் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைத்தல் | | |
| 4. அ. இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம் | | வயது வரம்பு 18 முதல் 35 வரை. குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.1.00 ஆகும். வ.எண்.4ஆ – மருத்துவமனை அமைத்தல் திட்டத்திற்கு குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3.00 இலட்சம் ஆகும். |
| ஆ. மருத்துவமனை, மருந்துக்கடை, கண்கண்ணாடியகம், முடநீக்க மையம், இரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல் (MBBS, BSMS, BDS, BPT D Pharm / B.Pharm. , Lab Technician / Para Medical Centre பட்டம் / பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு) | | |
| 5. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி | | வயது வரம்பு 18 முதல் 60 வரை. குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 1.00 இலட்சம் ஆகும். குழு ஊக்குநரின் குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 2.00 ஆகும். |
| 6. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி | | |
| 7. மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி | | இத்திட்டத்தில் மாற்றுத் திறனாளிகள், விதவைகள், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், நலிந்த கலைஞர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்திற்கு வயது வரம்பு இல்லை. |
| 4. இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி | | 21 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு |
| 5. தமிழ்நாடு தேர்வாணைய தொகுதி–1 (TNPSC Group-1) முதல்நிலை | | |

| | | | |
|---|---|---|---|
| | **தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி** | | **இத்திட்டத்திற்கு இல்லை.** |
| **6.** | **பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர்களுக்கு நிதியுதவி** | | **வயது வரம்பு 25 முதல் 45 வரை ஆகும். குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு இத்திட்டத்திற்கு இல்லை.** |

**மேற்கண்ட திட்டங்களில் பயன்பெற விரும்புபவர்கள் http://application.tahdco.com என்ற இணையதள முகவரிக்கு சென்று விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவு செய்யவேண்டும். பதிவு செய்யும் போது குடும்ப அட்டை எண் அல்லது இருப்பிட சான்று, சாதிச் சான்று, வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி, விண்ணப்பிக்க விரும்பும் திட்டம் மற்றும் திட்ட அறிக்கை சம்மந்தமான பதிவுகளை அதற்கான இடங்களில் அவசியம் பதிவு செய்யவேண்டும். புகைப்படத்தை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9